| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| உறுப்பினர்-செயலர்,<br>சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,<br>எண்.1 காந்தி இர்வின் சாலை,<br>எழும்பூர், சென்னை-8. | திரு பி.சி. துரைசாமி,<br>மேலாண்மை இயக்குநர்,<br>மெசர்ஸ் சக்தி மசாலா பிரைவேட் லிமிடெட்,<br>எண்.3, முத்து மாரியம்மன் கோயில் தெரு,<br>ஜெனகிநகர் விரிவுப் பகுதி,<br>வளசரவாக்கம், சென்னை-89. |

கடித எண்.எ3/25976/2005 — நாள்: 01.08.2007

அய்யா/அம்மையீர்,

பொருள்: செ.பெ.வ.குழுமம் - திட்ட அனுமதி - தரைத்தளம்+முதல்தளம்+இரண்டு குடியிருப்புகள் கொண்ட குடியிருப்பு கட்டிடம் நில அளவை எண்.81/1பகுதி நெற்குன்றம் கிராமம், தயாசதன், சென்னை வளர்ச்சிக் கட்டணம் மற்றும் பிற கட்டணங்கள் செலுத்துவது - தொடர்பாக.

பார்வை: சிறப்புக் கட்டிடப் பிரிவு எண்.1033/05, நாள் 14.10.2005இல் அன்று கிடைக்கப் பெற்ற திட்ட அனுமதி விண்ணப்பம்.

...

நில அளவை எண்.81/1 பகுதி, நெற்குன்றம் கிராமத்தில் தயாசதன் தெரு தரைத்தளம்+முதல் தளம் - இரண்டு குடியிருப்புகள் கொண்ட குடியிருப்பு உத்தேச கட்டிடத்திற்கு அனுமதி கொடுப்பது தங்களது விண்ணப்பம் பரிசீலனையில் உள்ளது.

இவ்விண்ணப்பத்தை மேற்கொண்டு பரிசீலிப்பதற்கு கீழ்க்கண்ட கட்டணங்களுக்காக உறுப்பினர்-செயலர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் என்ற பெயரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் எடுக்கப்பட்ட இரண்டு தனித்தனி வரைவோலைகளை இவ்வலுவலகத்தில் உள்ள கணக்குப்பிரிவில் செலுத்தி அதன் நகல் ரசீதை இப்பிரிவில் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

1. நிலம் மற்றும் கட்டிட வளர்ச்சிக் கட்டணம் (தமிழ்நாடு வளர்ச்சி மற்றும் ஊரமைப்புச் சட்டம் 1971இல் பிரிவு 59ன் கீழ்) : ரூ. 19,800/-(ரூபாய் பத்தொன்பதாயிரத்து எட்டு நூறு மட்டும்)

2. கூர்ந்தாய்வுக் கட்டணம் : --

த.பி.பா.

3) வரன்முறைக் கட்டணம் : ரூ.34,200/-(ரூபாய் முப்பத்தி நான்காயிரத்து இருநூறு மட்டும்)

4) திறந்தவெளிக் கட்டணம் (வளர்ச்சிக் கட்டுப்பாடு விதி) : --

2. மேற்கண்ட கட்டணங்கள் இக்கடிதம் அனுப்பப்பட்ட 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் இத்திட்ட அனுமதி விண்ணப்பம் ஒப்பளிப்பின்றி, திரும்ப அனுப்பப்படும்.

3. இருப்பினும் தாங்கள் கேட்டுக்கொண்டால் மேலும் ஒரு மாதகால அவகாசம் கொடுப்பது பற்றிப் பரிசீலிக்கப்படும். ஆனால் இக்கடிதம் அனுப்பப்பட்டு முடிவடையும் ஒவ்வொரு மாதம் மற்றும் பகுதிக் காலத்திற்கு வருடத்திற்கு 12 சதவீதம் (மாதத்திற்கு 1 சதவீதம்) வட்டி வசூலிக்கப்படும். இவ்வட்டித் தொகையை மற்ற கட்டணங்களுடன் சேர்த்து கட்டவேண்டும்.

4. கீழ்க்கண்டவற்றையும் தாங்கள் நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

அ) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் விதித்துள்ள மழைநீர் சேகரிப்பு முறைகளைத் தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.

5. மேற்கண்ட கட்டணங்களைச் செலுத்துவது மற்றும் இதர நிபந்தனைகளை நிறைவேற்றுவதையும் பொறுத்தே திட்டஅனுமதி வழங்கப்படும்.

தங்கள் உண்மையுள்ள,

R. Venkatesan 7/8/07

உறுப்பினர்-செயலருக்காக.

நகல்: முதுநிலைக் கணக்கு அதிகாரி,
கணக்குப் (பிரதான) பிரிவு,
சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்,
சென்னை-600 008.

எஸ்.எஸ்.1/8